## சங்கீதம் 55

**(நிகநோத்தில் வாசிக்கத் தாவீதுபாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவித்த மஸ்கீல் என்னும் சங்கீதம்)**

1. தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும்; என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்.

2. எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச்செய்யும்; சத்துருவினுடைய கூக்குரலினிமித்தமும், துன்மார்க்கர் செய்யும் இடுக்கத்தினிமித்தமும் என் தியானத்தில் முறையிடுகிறேன்.



3. அவர்கள் என்மேல் பழிசாட்டி, குரோதங்கொண்டு, என்னைப் பகைக்கிறார்கள்.

4. என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது; மரணத்திகில் என்மேல் விழுந்தது.



5. பயமும் நடுக்கமும், என்னைப் பிடித்தது; அருக்களிப்பு என்னை மூடிற்று.

6. அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன்.

7. நான் தூரத்தில் அலைந்து திரிந்து வனாந்தரத்தில் தங்கியிருப்பேன். (சேலா)

8. பெருங்காற்றுக்கும் புசலுக்கும் தப்பத் தீவிரித்துக் கொள்ளுவேன் என்றேன்.

9. ஆண்டவரே, அவர்களை அழித்து, அவர்கள் பாஷையைப் பிரிந்துபோகப் பண்ணும்; கொடுமையையும் சண்டையையும் நகரத்திலே கண்டேன்.

10. அவைகள் இரவும், பகலும், அதின் மதில்கள்மேல் சுற்றித்திரிகிறது; அக்கிரமமும் வாதையும் அதின் நடுவில் இருக்கிறது.

11. கேடுபாடுகள் அதின் நடுவில் இருக்கிறது; கொடுமையும் கபடும் அதின் வீதியை விட்டு விலகிப்போகிறதில்லை.

③

12. என்னை நிந்தித்தவன் சத்துரு அல்ல, அப்படியிருந்தால் சகிப்பேன்; எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினவன் என் பகைஞன் அல்ல, அப்படியிருந்தால் அவனுக்கு மறைந்திருப்பேன்.

13. எனக்குச் சமமான மனுஷனும், என் வழிகாட்டியும், என் தோழனுமாகிய நீயே அவன்.

14. நாம் ஒருமித்து, இன்பமான ஆலோசனைபண்ணி, கூட்டத்தோடே தேவாலயத்துக்குப் போனோம்.



15.மரணம்
அவர்களைத் தொடர்ந்து
பிடிப்பதாக; அவர்கள்
உயிரோடே பாதாளத்தில்
இறங்குவார்களாக;
அவர்கள் வாசஸ்தலங்களிலும்
அவர்கள் உள்ளத்திலும்
பொல்லாங்கு இருக்கிறது.

16. நானோ தேவனை நோக்கிக்
கூப்பிடுவேன்; **கர்த்தர்**
என்னை இரட்சிப்பார்.

17. அந்திசந்தி மத்தியான
வேளைகளிலும்
நான் தியானம்
பண்ணி
முறையிடுவேன்;
அவர் என் சத்தத்தைக்
கேட்பார்.



18. திரளான கூட்டமாய்க்கூடி
என்னோடு எதிர்த்தார்கள்;
அவரோ எனக்கு நேரிட்ட
போரை நீக்கி,
என் ஆத்துமாவைச்
சமாதானத்துடன் மீட்டு
விட்டார்.

19. ஆதிமுதலாய் வீற்றிருக்கிற
தேவன் கேட்டு,
அவர்களுக்குப் பதிலளிப்பார்;
அவர்களுக்கு மாறுதல்கள்
நேரிடாததினால், அவர்கள்
தேவனுக்குப் பயப்படாமற்
போகிறார்கள். (சேலா)

20. அவன் தன்னோடே
சமாதானமாயிருந்தவர்களுக்கு
விரோதமாய் தன் கையை
நீட்டி, தன் உடன்படிக்கையை
மீறி நடந்தான்.

21. அவன் வாயின் சொற்கள்
வெண்ணெயைப்போல
மெதுவானவைகள்,
அவன் இருதயமோ
யுத்தம்; அவன்
வார்த்தைகள் எண்ணெயிலும்
மிருதுவானவைகள், ஆனாலும்
அவைகள் உருவின
பட்டயங்கள்.



22. **கர்த்தர்மேல்**
உன் பாரத்தை வைத்துவிடு,
அவர் உன்னை ஆதரிப்பார்;
நீதிமானை ஒருபோதும்
தள்ளாடவொட்டார்.

23. தேவனே,
நீர் அவர்களை அழிவின்
குழியில் இறங்கப்பண்ணுவீர்;
இரத்தப்பிரியரும்,
சூதுள்ள மனுஷரும்
தங்கள் ஆயுளின் நாட்களில்
பாதிவரையிலாகிலும்
பிழைத்திருக்கமாட்டார்கள்;
நானோ உம்மை
நம்பியிருக்கிறேன்

**சங்கீதப் புத்தகம்:**

வேதாகமத்திலேயே அதிகமான
அதிகாரங்களைக் கொண்ட
இப்புத்தகம் இஸ்ரவேல்
மக்களுக்குப் பாமாலையாக
அமைந்திருந்தது. மனிதனுடைய
பலவித அனுபவங்களை
இப்புத்தகம் விளக்குவதால்
எல்லோரும்
இப்புத்தகத்தை
விரும்பிப்
படிக்கிறார்கள்.



**(பெலிஸ்தர் தாவீதைக் காத்தூரில் பிடித்தபோது யோனாத் ஏலம் ரிக்கோகீம் என்னும் வாத்தியத்தில் வாசிக்கும்படி தாவீது பாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவித்த மித்தாம் என்னும் சங்கீதம்)**

1. **தேவனே,** எனக்கு இரங்கும்;
மனுஷன் என்னை விழுங்கப்
பார்க்கிறான், நாள்தோறும்
போர்செய்து,
என்னை ஒடுக்குகிறான்.

2. என் சத்துருக்கள் நாள்தோறும்
என்னை விழுங்கப்
பார்க்கிறார்கள்; உன்னதமானவரே,
எனக்கு விரோதமாய்
அகங்கரித்துப் போர்
செய்கிறவர்கள் அநேகர் .

3. நான் பயப்படுகிற நாளில்
உம்மை நம்புவேன்.

4. **தேவனை** முன்னிட்டு
அவருடைய வார்த்தையைப்
புகழுவேன்; **தேவனை**
நம்பியிருக்கிறேன்,
நான் பயப்படேன்;
மாம்சமானவன்
எனக்கு என்ன செய்வான் ?



5. நித்தமும் என் வார்த்தைகளைப்
புரட்டுகிறார்கள்;
எனக்குத் தீங்கு செய்வதே
அவர்கள் முழு
எண்ணமாயிருக்கிறது.

6. அவர்கள் ஏகமாய்க் கூடி,
பதிவிருக்கிறார்கள்;
என் பிராணனை வாங்க
விரும்பி, என் காலடிகளைத்
தொடர்ந்து வருகிறார்கள்.

7. அவர்கள் தங்கள்
அக்கிரமத்தினால்
தப்புவார்களோ? **தேவனே,**
கோபங்கொண்டு
ஜனங்களைக் கீழே தள்ளும்.

8. என் அலைச்சல்களைத் **தேவரீர்**
எண்ணியிருக்கிறீர்;
என் கண்ணீரை
உம்முடைய
துருத்தியில் வையும்;
அவைகள் உம்முடைய கணக்கில்
அல்லவோ இருக்கிறது ?



9. நான் உம்மை நோக்கிக் கூப்பிடும்
நாளில் என் சத்துருக்கள்
பின்னிட்டுத் திரும்புவார்கள்;
**தேவன்** என் பட்சத்தில்
இருக்கிறார் என்பதை அறிவேன்.

10. **தேவனை** முன்னிட்டு
அவருடைய வார்த்தையைப்
புகழுவேன்; **கர்த்தரை**
முன்னிட்டு அவருடைய
வார்த்தையைப் புகழுவேன் .

11. **தேவனை நம்பியிருக்கிறேன்,**
நான் பயப்படேன்; மனுஷன்
எனக்கு என்னசெய்வான்?

12. **தேவனே,** நான் உமக்குப்
பண்ணின பொருத்தனைகள்
என்மேல் இருக்கிறது;
உமக்கு ஸ்தோத்திரங்களைச்
செலுத்துவேன்.

13. நான் **தேவனுக்கு** முன்பாக
ஜீவனுள்ளோருடைய
வெளிச்சத்திலே நடக்கும்படி ,
நீர் என் ஆத்துமாவை
மரணத்துக்கும் என் கால்களை
இடறலுக்கும்
தப்புவியாதிருப்பீரோ?

**(தாவீது சவுலுக்குத் தப்பியோடி கெபியில் ஒதுங்குகையில் தனக்கு நஷ்டம் நேரிடாதபடி அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்)**



1. எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்; உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்.

2. எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்.

3. என்னை விழுங்கப் பார்க்கிறவன் என்னை நிந்திக்கையில், அவர் பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, என்னை இரட்சிப்பார்: (சேலா) தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார்.



4. என் ஆத்துமா சிங்கங்களின் நடுவிலிருக்கிறது; தீயை இறைக்கிற மனுபுத்திரருக்குள்ளே கிடக்கிறேன்; அவர்கள் பற்கள் ஈட்டிகளும் அம்புகளும், அவர்கள் நாவு கருக்கான பட்டயமுமாயிருக்கிறது.

5. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின் மேலும் உயர்ந்திருப்பதாக.



6. என் கால்களுக்குக் கண்ணியை வைத்திருக்கிறார்கள்; என் ஆத்துமா தொய்ந்து போயிற்று; எனக்கு முன்பாகக் குழியை வெட்டி, அதின் நடுவிலே விழுந்தார்கள். (சேலா)



7. என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது, தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்.



8. என் மகிமையே, விழி; வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்; அதிகாலையில் விழித்துக்கொள்வேன்.

9. ஆண்டவரே, ஜனங்களுக்குள்ளே உம்மைத் துதிப்பேன்; ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.



10. உமது கிருபை வானபரியந்தமும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது.

11. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்தருளும்; உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக.

**(தான் கெட்டுப் போகாதபடிக்கு அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கத் தாவீது பாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவித்த மித்தாம் என்னும் சங்கீதம்)**

1. மவுனமாயிருக்கிறவர்களே, நீங்கள் மெய்யாய் நீதியைப் பேசுவீர்களோ? மனுபுத்திரரே, நியாயமாய்த் தீர்ப்பு செய்வீர்களோ?

2. மனதார நியாயக்கேடு செய்கிறீர்கள்; பூமியிலே உங்கள் கைகளின் கொடுமையை நிறுத்துக் கொடுக்கிறீர்கள்.

3. துன்மார்க்கர் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் பேதலிக்கிறார்கள்; தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் பொய் சொல்லி வழிதப்பிப் போகிறார்கள்.

4. சர்ப்பத்தின் விஷத்திற்கு ஒப்பான விஷம் அவர்களில் இருக்கிறது.



5. பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவிகொடாத படிக்குத் தன்காதை அடைக்கிற செவிட்டு விரியனைப்போல் இருக்கிறார்கள்.

6. தேவனே, அவர்கள் வாயிலுள்ள பற்களைத் தகர்த்துப்போடும்; **கர்த்தாவே,** பாலசிங்கங்களின் கடைவாய்ப் பற்களை நொறுக்கிப்போடும்.

7. கடந்தோடுகிற தண்ணீரைப்போல் அவர்கள் கழிந்துபோகட்டும்; அவன் தன் அம்புகளைத் தொடுக்கும்போது அவைகள் சின்னபின்னமாய்ப் போகக்கடவது.

8. கரைந்துபோகிற நத்தையைப் போல் ஒழிந்துபோவார்களாக; ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப்போல் சூரியனைக் காணாதிருப்பார்களாக.



9. முள் நெருப்பினால் உங்கள் பானைகளில் சூடேறு முன்னே பச்சையானதையும் எரிந்து போனதையும் அவர் சூழல் காற்றினால் அடித்துக்கொண்டு போவார்.

10. பழிவாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான்; அவன் தன் பாதங்களைத் துன்மார்க்கனுடைய இரத்தத்திலே கழுவுவான்.

11. அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப் பலன் உண்டென்றும், மெய்யாய்ப் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்.

## முக்கிய வார்த்தைகள்

**துதியுங்கள்,** அல்லேலுயா **அல்லேலுயா** என்ற வார்த்தையின் பொருள்‘தேவனைத் **துதி** ‘என்பதாகும்.



**(சவுல் தாவீதைக் கொல்லுதற்காக ஏவலாட்களை அனுப்பின போது அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க அவன் பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவித்த மிக்தாம் என்னும் சங்கீதம்)**

1. என் தேவனே,
என் சத்துருக்களுக்கு
என்னைத் தப்புவியும்;
என்மேல் எழும்புகிறவர்களுக்கு
என்னை விலக்கி உயர்ந்த
அடைக்கலத்திலே வையும்.

2. அக்கிரமக்காரருக்கு
என்னைத் தப்புவித்து,
இரத்தப்பிரியரான மனுஷருக்கு
என்னை விலக்கி இரட்சியும்.

3. இதோ, என் பிராணனுக்குப்
பதிவிருக்கிறார்கள், **கர்த்தாவே,**
என்னிடத்தில் மீறுதலும்
பாவமும் இல்லாதிருந்தும்,
பலவான்கள்
எனக்கு விரோதமாய்க்
கூட்டங்கூடுகிறார்கள்.

4. என்னிடத்தில் அக்கிரமம்
இல்லாதிருந்தும், ஓடித்திரிந்து
யுத்தத்துக்கு ஆயத்தமாகிறார்கள்;
எனக்குத் துணை செய்ய விழித்து
என்னை நோக்கிப்பாரும்.

5. சேனைகளின் தேவனாகிய
**கர்த்தாவே,** இஸ்ரவேலின்
தேவனே, நீர் சகல ஜாதிகளையும்
விசாரிக்க விழித்தெழும்பும்;
வஞ்சகமாய்த் துரோகஞ்
செய்கிற ஒருவருக்கும் தயை
செய்யாதேயும். (சேலா)

6. அவர்கள் சாயங்காலத்தில்
திரும்பிவந்து,
நாய்களைப் போல
ஊளையிட்டு,
ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.



7. இதோ, தங்கள்
வார்த்தைகளைக் கக்குகிறார்கள்;
அவர்கள் உதடுகளில்
பட்டயங்கள் இருக்கிறது,
கேட்கிறவன்
யார் என்கிறார்கள்.

8. ஆனாலும் **கர்த்தாவே,**
நீர் அவர்களைப் பார்த்து
நகைப்பீர்; புறஜாதிகள்
யாவரையும் இகழுவீர்.

9. அவன் வல்லமையை
நான் கண்டு,
உமக்குக் காத்திருப்பேன்;
தேவனே எனக்கு உயர்ந்த
அடைக்கலம்.

10. என் தேவன்
தம்முடைய கிருபையினால்
என்னைச் சந்திப்பார்;
தேவன் என் சத்துருக்களுக்கு
வரும் நீதிசரிகட்டுதலை
நான் காணும்படி செய்வார்.

11. அவர்களைக் கொன்று
போடாதேயும், என் ஜனங்கள்
மறந்துபோவார்களே;
எங்கள் கேடகமாகிய
ஆண்டவரே,
உமது வல்லமையினால்
அவர்களைச் சிதறடித்து,
அவர்களைத் தாழ்த்திப்போடும்.



12. அவர்கள் உதடுகளின் பேச்சு
அவர்கள் வாயின்
பாவமாயிருக்கிறது;
அவர்கள் இட்ட
சாபமும் சொல்லிய பொய்யும்
ஆகிய இவைகளினிமித்தம்
தங்கள் பெருமையில்
அகப்படுவார்களாக.

13. தேவன் பூமியின் எல்லை
வரைக்கும் யாக்கோபிலே
அரசாளுகிறவர் என்று அவர்கள்
அறியும்பொருட்டு,
அவர்களை உம்முடைய
உக்கிரத்திலே நிர்மூலமாக்கும்;
இனி இராதபடிக்கு அவர்களை
நிர்மூலமாக்கும். (சேலா)

14. அவர்கள் சாயங்காலத்தில்
திரும்பிவந்து, நாய்களைப்
போல ஊளையிட்டு,
ஊரைச்சுற்றித் திரிகிறார்கள்.



15. அவர்கள் உணவுக்காக அலைந்து
திரிந்து திருப்தியடையாமல்,
முறுமுறுத்துக்
கொண்டிருப்பார்கள்.

16. நானோ உம்முடைய
வல்லமையைப் பாடி,
காலையிலே
உம்முடைய கிருபையை
மகிழ்ச்சியோடு புகழுவேன்;
எனக்கு நெருக்கமுண்டான
நாளிலே நீர் எனக்குத்
தஞ்சமும் உயர்ந்த
அடைக்கலமுமானீர்.



17. என் பெலனே, உம்மைக்
கீர்த்தனம் பண்ணுவேன்;
தேவன் எனக்கு உயர்ந்த
அடைக்கலமும், கிருபையுள்ள
என் தேவனுமாயிருக்கிறார்.

## சங்கீதம் 60

**(தாவீது மெசொபொத்தாமியா தேசத்துச் சீரியரோடும், சோபா தேசத்துச் சீரியரோடும் யுத்தம் பண்ணினபோது, யோவாப் திரும்பி உப்புப் பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பன்னீராயிரம்பேரை வெட்டின போது, அவன் சாட்சியை விளக்குவிக்கும் ஆறு நரம்புக் கின்னரத்திலே போதிப்பதற்காகப் பாடினதும் இராகத்தலைவனுக்கு ஒப்புவித்ததுமான மிக்தாம் என்னும் சங்கீதம்)**

1. தேவனே, நீர்
எங்களைக் கைவிட்டீர்,
எங்களைச் சிதறடித்தீர்,
எங்கள்மேல் கோபமாயிருந்தீர்;
மறுபடியும் எங்களிடமாய்த்
திரும்பியருளும்.

2. பூமியை அதிரப்பண்ணி,
அதை வெடிப்பாக்கினீர்;
அதின் வெடிப்புகளைப்
பொருந்தப்பண்ணும்;
அது அசைகின்றது.

3. உம்முடைய ஜனங்களுக்குக்
கடினமான காரியத்தைக்
காண்பித்தீர்; தத்தளிப்பின்
மதுபானத்தை எங்களுக்குக்
குடிக்கக் கொடுத்தீர்.

4. சத்தியத்தினிமித்தம்
ஏற்றும்படியாக,
உமக்குப் பயந்து
நடக்கிறவர்களுக்கு
ஒரு கொடியைக் கொடுத்தீர்.
(சேலா)

5. உமது பிரியர் விடுவிக்கப்படும்
படி, உமது வலதுகரத்தினால்
இரட்சித்து,
எனக்குச் செவிகொடுத்தருளும்.

6. தேவன் தமது பரிசுத்தத்தைக்
கொண்டு விளம்பினார்,
ஆகையால் களிகூருவேன்;
சீகேமைப் பங்கிட்டு,
சுக்கோத்தின் பள்ளத்தாக்கை
அளந்து கொள்ளுவேன்.

7. கீலேயாத் என்னுடையது,
மனாசேயும் என்னுடையது,
எப்பிராயீம்
என் தலையின் பெலன், யூதா
என் நியாயப்பிரமாணிகன்.

8. மோவாப் என் பாதபாத்திரம்,
ஏதோமின்மேல்
என் பாதரட்சையை எறிந்து
போடுவேன்; பெலிஸ்தியாவே,
என்னிமித்தம்
ஆர்ப்பரித்துக்கொள்.

9. அரணான பட்டணத்திற்குள்
என்னை நடத்திக்கொண்டு
போகிறவர் யார்? ஏதோம் மட்டும்
எனக்கு வழிகாட்டுகிறவர் யார்?

10. எங்கள் சேனைகளோடே
புறப்படாமலிருந்த
தேவரீர் அல்லவோ?
எங்களைத் தள்ளிவிட்டிருந்த
தேவரீர் அல்லவோ?

11. இக்கட்டில்
எங்களுக்கு உதவி செய்யும்;
மனுஷனுடைய உதவி விருதா.

12. தேவனாலே
பராக்கிரமம் செய்வோம்;
அவரே எங்கள் சத்துருக்களை
மிதித்துப்போடுவார்.

## சங்கீதம் 61

**(நெகினோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. தேவனே, என் கூப்பிடுதலைக்
கேட்டு, என் விண்ணப்பத்தைக்
கவனியும்.

2. என் இருதயம் தொய்யும் போது
பூமியின் கடையாந்தரத்திலிருந்து
உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்;
எனக்கு எட்டாத உயரமான
கன்மலையில் என்னைக்
கொண்டுபோய்விடும்.

3. நீர் எனக்கு அடைக்கலமும்,
சத்துருவுக்கு எதிரே பெலத்த
துருகமுமாயிருந்தீர்.

4. நான் உம்முடைய கூடாரத்தில்
சதாகாலமும் தங்குவேன்;
உமது செட்டைகளின் மறைவிலே
வந்து அடைவேன். (சேலா)

5. தேவனே, நீர் என்
பொருத்தனைகளைக் கேட்டீர்;
உமது நாமத்திற்குப்
பயப்படுகிறவர்களின்
சுதந்தரத்தை எனக்குத் தந்தீர்.

6. ராஜாவின் நாட்களோடே
நாட்களைக் கூட்டுவீர்;
அவர் வருஷங்கள் தலைமுறை
தலைமுறையாக இருக்கும்.

7. அவர் தேவனுக்கு முன்பாக
என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்;
தயையும், உண்மையும் அவரைக்
காக்கக் கட்டளையிடும்.

8. இப்படியே தினமும்
என் பொருத்தனைகளை
நான் செலுத்தும்படியாக,
உமது நாமத்தை என்றைக்கும்
கீர்த்தனம்பண்ணுவேன்.



**(எதுதூன் என்னும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும்.

2. அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.

3. நீங்கள் எதுவரைக்கும் ஒரு மனுஷனுக்குத் தீங்குசெய்ய நினைப்பீர்கள், நீங்கள் அனைவரும் சங்கரிக்கப்படுவீர்கள், சாய்ந்த மதிலுக்கும் இடிந்த சுவருக்கும் ஒப்பாவீர்கள்.

4. அவனுடைய மேன்மையிலிருந்து அவனைத் தள்ளும்படிக்கே அவர்கள் ஆலோசனைபண்ணி, அபத்தம்பேச விரும்புகிறார்கள்; தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள். (சேலா)

5. என் ஆத்துமாவே, தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும்.




6. அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அசைக்கப்படுவதில்லை.

7. என் இரட்சிப்பும், என் மகிமையும் தேவனிடத்தில் இருக்கிறது; பெலனான என் கன்மலையும் என் அடைக்கலமும் தேவனுக்குள் இருக்கிறது.

8. ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். (சேலா)



9. கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே; தராசிலே வைக்கப்பட்டால் அவர்களெல்லாரும் மாயையிலும் லேசானவர்ககள்.

10. கொடுமையை நம்பாதிருங்கள்; கொள்ளையினால் பெருமைபாராட்டாதிருங்கள்; ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதேயுங்கள்.

11. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்; வல்லமை தேவனுடையது என்பதே.

12. கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்.

**(தாவீது யூதாவின் வனாந்தரத்திலிருக்கையில் பாடின சங்கீதம்)**



1. தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.

2. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன்.

3. ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.



4. என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.

5. நிணத்தையும், கொழுப்பையும் உண்டதுபோல என் ஆத்துமா திருப்தியாகும்; என் வாய் ஆனந்தக்களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்.

6. என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும் போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.



7. நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்.

8. என் ஆத்துமா உம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது: உமது வலதுகரம் என்னைத் தாங்குகிறது.

9. என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்களோ, பூமியின் தாழ்விடங்களில் இறங்குவார்கள்.



10. அவர்கள் பட்டயத்தால் விழுவார்கள்; நரிகளுக்கு இரையாவார்கள்.

11. ராஜாவோ தேவனில் களிகூருவார்; அவர்பேரில் சத்தியம் பண்ணுகிறவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்; பொய் பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

## சேலா:

இசையமைப்பில் பயன்படுத்தப் படும் இந்த வார்த்தையின் பொருள் இடைவேளை, அமைதி என்பதாகும். ஒரு பாடலைப் பாடும்போது ஒரு குறிப்பிட்ட வரியைப் பாடினபின் அதன் கருத்தை சற்று கவனமாக யோசித்துப் பார்க்க எடுத்துக் கொள்ளும் இடைவேளை **'சேலா'** என்று அழைக்கப் படுகிறது. சங்கீதப் புத்தகத்தில் இந்த வார்த்தை **71** தடவை வருகிறது.

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. தேவனே, என் விண்ணப்பத்தில் என் சத்தத்தைக் கேட்டருளும்; சத்துருவால் வரும் பயத்தை நீக்கி, என் பிராணனைக் காத்தருளும்.



2. துன்மார்க்கர் செய்யும் இரகசிய ஆலோசனைக்கும், அக்கிரமக்காரருடைய கலகத்துக்கும் என்னை விலக்கி மறைத்தருளும்.

3. அவர்கள் தங்கள் நாவைப் பட்டயத்தைப் போல் கூர்மையாக்கி,

4. மறைவுகளில் உத்தமன்மேல் எய்யும்பொருட்டுக் கசப்பான வார்த்தைகளாகிய தங்கள் அம்புகளை நாணேற்றுகிறார்கள் சற்றும் பயமின்றிச் சடிதியில் அவன்மேல் எய்கிறார்கள்.



5. அவர்கள் பொல்லாத காரியத்தில் தங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, மறைவான கண்ணிகளை வைக்க ஆலோசனைபண்ணி, அவைகளைக் காண்பவன் யார் என்கிறார்கள்.



6. அவர்கள் நியாயக்கேடுகளை ஆய்ந்துதேடி, தந்திரமான யோசனை நிறைவேறும்படி பிரயத்தனம்பண்ணுகிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுடைய உட்கருத்தும் இருதயமும் ஆழமாயிருக்கிறது.

7. ஆனாலும் தேவன் அவர்கள்மேல் அம்புகளை எய்வார், சடிதியாய் அவர்கள் காயப்படுவார்கள்.

8. அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும்; அவர்களைக் காண்கிற யாவரும் ஓடிப்போவார்கள்.

9. எல்லா மனுஷரும் பயந்து, தேவனுடைய செயலை அறிவித்து, அவர் கிரியையை உணர்ந்துகொள்வார்கள்.

10. நீதிமான் **கர்த்தருக்குள்** மகிழ்ந்து, அவரை நம்புவான்; செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்.

**எழுதப்பட்ட காலம்**

கிறிஸ்துவுக்கு முன் 10 நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு. 1000 இல் எழுதப்பட்ட பல சங்கீதங்கள் உண்டு. மோசே காலத்திலிருந்து சிறையிருப்பிற்கு பின்னர் உள்ள காலம் வரைக்கும் சில நூற்றாண்டுகள் இடைக்காலத்தில் எழுதப்பட்ட சங்கீதங்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதமாகிய பாட்டு)**

1. தேவனே, சீயோனில் உமக்காகத் துதியானது அமைந்து காத்திருக்கிறது; பொருத்தனை உமக்குச் செலுத்தப்படும்.

2. ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்.

3. அக்கிரம விஷயங்கள் என்மேல் மிஞ்சி வல்லமை கொண்டது; தேவரீரோ எங்கள் மீறுதல்களை நிவிர்த்தியாக்குகிறீர்.

4. உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்.



5. பூமியின் கடையாந்தரங்களிலும் தூரமான சமுத்திரங்களிலுமுள்ளவர்கள் எல்லாரும் நம்பும் நம்பிக்கையாயிருக்கிற எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிறதினால் எங்களுக்கு நீதியுள்ள உத்தரவு அருளுகிறீர்.

6. வல்லமையை இடைகட்டிக் கொண்டு, உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி,

7. சமுத்திரங்களின் மும்முரத்தையும் அலைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர்.

8. கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங்களினிமித்தம் பயப்படுகிறார்கள்; காலையையும், மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்.

9. தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர்.

10. அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.

11. வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

12. வனாந்தர தாபரங்களிலும் பொழிகிறது; மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது.

13. மேய்ச்சலுள்ள வெளிகளில் ஆடுகள் நிறைந்திருக்கிறது; பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது; அவைகள் கெம்பீரித்துப் பாடுகிறது.



**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதமாகிய பாட்டு)**

1. பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

2. அவர் நாமத்தின் மகத்துவத்தைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய துதியின் மகிமையைக் கொண்டாடுங்கள்.



3. தேவனை நோக்கி: உமது கிரியைகளில் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறீர்; உமது மகத்துவமான வல்லமையினிமித்தம் உம்முடைய சத்துருக்கள் உமக்கு இச்சகம்பேசி அடங்குவார்கள்.

4. பூமியின்மீதெங்கும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைத் துதித்துப் பாடுவார்கள்; அவர்கள் உம்முடைய நாமத்தைத் துதித்துப் பாடுவார்கள் என்று சொல்லுங்கள். (சேலா)



5. தேவனுடைய செய்கைகளை வந்து பாருங்கள்; அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர்.

6. கடலை உலர்ந்த தரையாக மாற்றினார்; ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள்; அங்கே அவரில் களிகூர்ந்தோம்.

7. அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார்; அவருடைய கண்கள் ஜாதிகள் மேல் நோக்கமாயிருக்கிறது; துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக. (சேலா)

8. ஜனங்களே, நம்முடைய தேவனை ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்குஞ் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள்.

9. அவர் நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.

10. தேவனே, எங்களைச் சோதித்தீர்; வெள்ளியைப் புடமிடுகிறதுபோல எங்களைப் புடமிட்டீர்.



11. எங்களை வலையில் அகப்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தை ஏற்றினீர்.

12. மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப்போகப் பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டுவந்து விட்டீர்.

13. சர்வாங்க தகனபலிகளோடே உமது ஆலயத்திற்குள் பிரவேசிப்பேன்;

14. என் இக்கட்டில்
நான் என் உதடுகளைத் திறந்து,
என் வாயினால் சொல்லிய
என் பொருத்தனைகளை
உமக்குச் செலுத்துவேன்.



15. ஆட்டுக்கடாக்களின்
நிணப்புகையுடனே
கொழுமையானவைகளை
உமக்குத் தகனபலியாக
இடுவேன்; காளைகளையும்
செம்மறியாட்டுக்
கடாக்களையும்
உமக்குப் பலியிடுவேன். (சேலா)



16. தேவனுக்குப் பயந்தவர்களே,
நீங்கள் எல்லாரும்
வந்து கேளுங்கள்;
அவர் என் ஆத்துமாவுக்குச்
செய்ததைச் சொல்லுவேன்.

17. அவரை நோக்கி
என் வாயினால் கூப்பிட்டேன்,
என் நாவினால்
அவர் புகழப்பட்டார்.

18. என் இருதயத்தில் அக்கிரம
சிந்தை கொண்டிருந்தேனானால்,
ஆண்டவர்
எனக்குச் செவிகொடார்.

19. மெய்யாய்த் தேவன்
எனக்குச் செவிகொடுத்தார்,
என் ஜெபத்தின் சத்தத்தைக்
கேட்டார்.

20. என் ஜெபத்தைத்
தள்ளாமலும்,
தமது கிருபையை
என்னைவிட்டு
விலக்காமலும்
இருந்த தேவனுக்கு
ஸ்தோத்திரமுண்டாவதாக.

## சங்கீதம் 67

**(நெகினோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதப் பாட்டு)**

1. தேவனே, பூமியில்
உம்முடைய வழியும்,
எல்லா ஜாதிகளுக்குள்ளும்
உம்முடைய இரட்சணியமும்
விளங்கும்படியாய்,

2. தேவரீர் எங்களுக்கு இரங்கி,
எங்களை ஆசீர்வதித்து,
உம்முடைய முகத்தை
எங்கள்மேல்
பிரகாசிக்கப்பண்ணும். (சேலா)

3. தேவனே, ஜனங்கள்
உம்மைத்
துதிப்பார்களாக;
சகல ஜனங்களும்
உம்மைத் துதிப்பார்களாக.



4. தேவரீர் ஜனங்களை
நிதானமாய் நியாயந்தீர்த்து,
பூமியிலுள்ள ஜாதிகளை
நடத்துவீர்; ஆதலால் ஜாதிகள்
சந்தோஷித்து, கெம்பீரத்தோடே
மகிழக்கடவர்கள். (சேலா)

5. தேவனே, ஜனங்கள்
உம்மைத் துதிப்பார்களாக;
சகல ஜனங்களும்
உம்மைத் துதிப்பார்களாக.

6. பூமி தன் பலனைத் தரும்,
தேவனாகிய எங்கள் தேவனே
எங்களை ஆசீர்வதிப்பார்.

7. தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்;
பூமியின் எல்லைகளெல்லாம்
அவருக்குப் பயந்திருக்கும்.

**(இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் பாட்டாகிய சங்கீதம்)**

1. தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்குமுன்பாக ஓடிப்போவார்கள்.

2. புகை பறக்கடிக்கப்படுவது போல அவர்களைப் பறக்கடிப்பீர்; மெழுகு அக்கினிக்கு முன் உருகுவதுபோலத் துன்மார்க்கர் தேவனுக்கு முன் அழிவார்கள்.



3. நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து, ஆனந்த சந்தோஷமடைவார்கள்.



4. தேவனைப்பாடி, அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்; அவருடைய நாமம் **யேகோவா,** அவருக்கு முன்பாகக் களிகூருங்கள்.



5. தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்.

6. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்; துரோகிகளோ வறண்ட பூமியில் தங்குவார்கள்.

7. தேவனே, நீர் உம்முடைய ஜனங்களுக்கு முன்னே சென்று, அவாந்தர வெளியிலே நடந்து வருகையில், (சேலா)

8. பூமி அதிர்ந்தது; தேவனாகிய உமக்கு முன்பாக வானமும் பொழிந்தது; இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற தேவனுக்கு முன்பாகவே இந்தச் சீனாய்மலையும் அசைந்தது.

9. தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்; இளைத்துப் போன உமது சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர்.



10. உம்முடைய மந்தை அதிலே தங்கியிருந்தது; தேவனே, உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்.

11. ஆண்டவர் வசனம் தந்தார்; அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி.

12. சேனைகளின் ராஜாக்கள் தத்தளித்து ஓடினார்கள்; வீட்டிலிருந்த ஸ்திரீயானவள் கொள்ளைப்பொருளைப் பங்கிட்டாள்.

13. நீங்கள் அடுப்பினடியில் கிடந்தவர்களாயிருந்தாலும், வெள்ளியால் அலங்கரிக்கப்பட்ட புறாச்சிறகுகள் போலவும், பசும்பொன் நிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவும் இருப்பீர்கள்.



14. சர்வவல்லவர் அதில் ராஜாக்களைச் சிதறடித்தபோது, அது சல்மோன் மலையின் உறைந்த மழைபோல் வெண்மையாயிற்று.

15. தேவபர்வதம் பாசான் பர்வதம் போலிருக்கிறது; பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது.

16. உயர்ந்த சிகரமுள்ள பர்வதங்களே, ஏன் துள்ளுகிறீர்கள்; இந்தப் பர்வதத்தில் வாசமாயிருக்க தேவன் விரும்பினார்; ஆம், **கர்த்தர்** இதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

17. தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது; ஆண்டவர் பரிசுத்த ஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்.

18. தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்; தேவனாகிய **கர்த்தர்** மனுஷருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனுஷர்களுக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்.

19. எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே. (சேலா)



20. நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய **கர்த்தரால்** மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு.

21. மெய்யாகவே தேவன் தம்முடைய சத்துருக்களின் சிரசையும், தன் அக்கிரமங்களில் துணிந்து நடக்கிறவனுடைய மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்.

22. உன் கால்கள் சத்துருக்களின் இரத்தத்தில் பதியும்படியாகவும், உன் நாய்களின் நாவு அதை நக்கும்படியாகவும்,



23. என்னுடைய ஜனத்தைப் பாசானிலிருந்து திரும்ப அழைத்துவருவேன்; அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்துவருவேன் என்று ஆண்டவர் சொன்னார்.

24. தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள்; என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள்.

25. முன்னாகப் பாடுகிறவர்களும், பின்னாக வீணைகளை வாசிக்கிறவர்களும், சுற்றிலும் தம்புரு வாசிக்கிற கன்னிகைகளும் நடந்தார்கள்.

26. இஸ்ரவேலின் ஊற்றிலிருந்து தோன்றினவர்களே, சபைகளின் நடுவே ஆண்டவராகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.



27. அங்கே அவர்களை ஆளுகிற சின்ன பென்யமீனும், யூதாவின் பிரபுக்களும், அவர்கள் கூட்டமும், செபுலோனின் பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்களும் உண்டு.

28. உன் தேவன் உனக்குப் பலத்தைக் கட்டளையிட்டார்; தேவனே, நீர் எங்கள் நிமித்தம் உண்டுபண்ணினதைத் திடப்படுத்தும்.

29. எருசலேமிலுள்ள உம்முடைய ஆலயத்தினிமித்தம், ராஜாக்கள் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்.

30. நாணலிலுள்ள மிருகக் கூட்டத்தையும், ஜனங்களாகிய கன்றுகளோடு கூட ரிஷப கூட்டத்தையும் அதட்டும்; ஒவ்வொருவனும் வெள்ளிப் பணங்களைக் கொண்டுவந்து பணிந்துகொள்ளுவான்; யுத்தங்களில் பிரியப்படுகிற ஜனங்களைச் சிதறடிப்பார்.

31. பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள்; எத்தியோப்பியா தேவனை நோக்கி கையெடுக்கத் தீவிரிக்கும்.

32. பூமியின் ராஜ்யங்களே, தேவனைப் பாடி, ஆண்டவரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். (சேலா)

33. ஆதிமுதலாயிருக்கிற வானாதி வானங்களின்மேல் எழுந்தருளியிருக்கிறவரைப் பாடுங்கள்; இதோ, தமது சத்தத்தைப் பலத்த சத்தமாய் முழங்கப்பண்ணுகிறார்.

34. தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துங்கள்; அவருடைய மகிமை இஸ்ரவேலின் மேலும், அவருடைய வல்லமை மேகமண்டலங்களிலும் உள்ளது.

35. தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்; இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்; தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக.

**பல்வேறு வகையான சங்கீதங்கள்**

சங்கீதப் புத்தகத்தில் பாதி சங்கீதங்கள் நெருக்கத்திலும், இக்கட்டுகளிலும், வேதனையோடு இருக்கையில் நம்பிக்கையோடும் எதிர் பார்ப்போடும் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களாகும். **40** சங்கீதங்கள் தேவனைபோற்றிப் புகழ்ந்து பாடும் துதிப்பாடல்களாகும். பல்வேறு வகையான தலைப்புகளில் எழுதப்பட்ட சங்கீதங்களின் பட்டியலை கவனமாக படித்துப் பாருங்கள்.

**(சோஷனீம் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. தேவனே, என்னை இரட்சியும்; வெள்ளங்கள் என் ஆத்துமா மட்டும் பெருகிவருகிறது.

2. ஆழமான உளையில் அமிழ்ந்திருக்கிறேன், நிற்க நிலையில்லை, நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன்; வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது.

3. நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன்; என் தொண்டை வறண்டு போயிற்று; என் தேவனுக்கு நான் காத்திருக்கையால், என் கண்கள் பூத்துப்போயிற்று.

4. நிமித்தமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறார்கள்; வீணாக எனக்குச் சத்துருக்களாகி என்னைச் சங்கரிக்க வேண்டுமென்றிருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள்; நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்க வேண்டியதாயிற்று.

5. தேவனே, நீர் என் புத்தியீனத்தை அறிந்திருக்கிறீர்; என் குற்றங்கள் உமக்கு மறைந்திருக்கவில்லை.

6. சேனைகளின் **கர்த்தராகிய** ஆண்டவரே, உமக்காகக் காத்திருக்கிறவர்கள் என்னிமித்தம் வெட்கப்பட்டுப் போகாதிருப்பார்களாக; இஸ்ரவேலின் தேவனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னிமித்தம் நாணமடையாதிருப்பார்களாக.



7. உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று.



8. என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன்.

9. உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது.

10. என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்; அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது.

11. இரட்டை என் உடுப்பாக்கினேன்; அப்பொழுதும் அவர்களுக்குப் பழமொழியானேன்.

12. வாசலில் உட்கார்ந்திருக்கிறவர்கள் எனக்கு விரோதமாய்ப் பேசுகிறார்கள்; மதுபானம் பண்ணுகிறவர்களின் பாடலானேன்.

13. ஆனாலும் **கர்த்தாவே,**
அநுக்கிரக காலத்திலே
உம்மை நோக்கி விண்ணப்பஞ்
செய்கிறேன்; தேவனே,
உமது மிகுந்த
கிருபையினாலும்
உமது இரட்சிப்பின்
சத்தியத்தினாலும்
எனக்குச்
செவிகொடுத்தருளும்.



14. நான் அமிழ்ந்திப்
போகாதபடிக்குச்
சேற்றினின்று
என்னைத்
தூக்கிவிடும்; என்னைப்
பகைக்கிறவர்களினின்றும்
நிலையாத ஜலத்தினின்றும்
நான் நீங்கும்படி செய்யும்.



15. ஜலப்பிரவாகங்கள்
என்மேல் புரளாமலும்,
ஆழம் என்னை விழுங்காமலும்,
பாதாளம்
என்மேல் தன் வாயை
அடைத்துக்கொள்ளாமலும்
இருப்பதாக.

16. **கர்த்தாவே,**
என் விண்ணப்பத்தைக்
கேட்டருளும்;
உம்முடைய தயை
நலமாயிருக்கிறது;
உமது உருக்கமான
இரக்கங்களின்படி
என்னைக் கடாட்சித்தருளும்.



17. உமது முகத்தை உமது
அடியேனுக்கு மறையாதேயும்;
நான் வியாகுலப்படுகிறேன்,
எனக்குத் தீவிரமாய்ச்
செவிகொடுத்தருளும்.

18. நீர் என் ஆத்துமாவினிடத்தில்
வந்து அதை விடுதலைபண்ணும்;
என் சத்துருக்களினிமித்தம்
என்னை மீட்டுவிடும்.

19. தேவரீர் என் நிந்தையையும்
என் வெட்கத்தையும்
என் அவமானத்தையும்
அறிந்திருக்கிறீர்;
என் சத்துருக்கள்
எல்லாரும்
உமக்கு முன்பாக
இருக்கிறார்கள்.

20. நிந்தை என் இருதயத்தைப்
பிளந்தது; நான் மிகவும்
வேதனைப்படுகிறேன்;
எனக்காகப்
பரிதபிக்கிறவனுண்டோ
என்று காத்திருந்தேன்,
ஒருவனும் இல்லை;
தேற்றுகிறவர்களுக்குக்
காத்திருந்தேன்;
ஒருவனையும் காணேன்.



21. என் ஆகாரத்தில் கசப்புக்
கலந்து கொடுத்தார்கள்,
என் தாகத்துக்குக் காடியைக்
குடிக்கக்கொடுத்தார்கள்.

22. அவர்களுடைய பந்தி
அவர்களுக்குக் கண்ணியும்,
அவர்களுடைய செல்வம்
அவர்களுக்கு
வலையுமாயிருக்கக்கடவது.

23. அவர்களுடைய கண்கள்
காணாதபடி
அந்தகாரப்படக்கடவது;
அவர்கள் இடுப்புகளை
எப்போதும்
தள்ளாடப்பண்ணும்.

24. உம்முடைய உக்கிரத்தை
அவர்கள்மேல் ஊற்றும்;
உம்முடைய கோபாக்கினி
அவர்களைத் தொடர்ந்து
பிடிப்பதாக.

25. அவர்கள் வாசஸ்தலம்
பாழாகக்கடவது;
அவர்களுடைய கூடாரங்களில்
குடியில்லாமற்போவதாக.

26. தேவரீர் அடித்தவனை
அவர்கள் துன்பப்படுத்தி,
நீர் காயப்படுத்தினவர்களை
நோகப் பேசுகிறார்களே.

27. அக்கிரமத்தின்மேல்
அக்கிரமத்தை
அவர்கள்மேல் சுமத்தும்,
அவர்கள் உமது நீதிக்கு
வந்தெட்டாதிருப்பார்களாக.

28. ஜீவபுஸ்தகத்திலிருந்து
அவர்கள் பேர் கிறுக்கப்பட்டுப்
போவதாக; நீதிமான்கள்
பேரோடே அவர்கள் பேர்
எழுதப்படாதிருப்பதாக.

29. நானோ சிறுமையும்
துயரமுமுள்ளவன்; தேவனே
உம்முடைய இரட்சிப்பு
எனக்கு உயர்ந்த
அடைக்கலமாவதாக.



30. தேவனுடைய
நாமத்தைப்
பாட்டினால் துதித்து,
அவரை ஸ்தோத்திரத்தினால்
மகிமைப்படுத்துவேன்.

31. கொம்பும்
விரிகுளம்புமுள்ள
காளையெருதைப்
பார்க்கிலும்,
இதுவே **கர்த்தருக்குப்**
பிரியமாயிருக்கும்.



32. சாந்தகுணமுள்ளவர்கள்
இதைக் கண்டு
சந்தோஷப்படுவார்கள்;
தேவனைத் தேடுகிறவர்களே,
உங்கள் இருதயம் வாழும்.

33. **கர்த்தர்** எளியவர்களின்
விண்ணப்பத்தைக்
கேட்கிறார், கட்டுண்ட
தம்முடையவர்களை
அவர் புறக்கணியார்.

34. வானமும் பூமியும்
சமுத்திரங்களும்
அவைகளில் சஞ்சரிக்கிற யாவும்
அவரைத் துதிக்கக்கடவது.

35. தேவன் சீயோனை
இரட்சித்து, யூதாவின்
பட்டணங்களைக் கட்டுவார்;
அப்பொழுது
அங்கே குடியிருந்து அதைச்
சுதந்தரித்துக் கொள்வார்கள்.

36. அவருடைய ஊழியக்காரரின்
சந்ததியார்
அதைச் சுதந்தரித்துக்
கொள்வார்கள்;
அவருடைய நாமத்தை
நேசிக்கிறவர்கள்
அதில் வாசமாயிருப்பார்கள்.



**ஆயத்தம்** : சங்கீதப் புத்தகத்தை வாசிக்கும்போது
அமைதியாக அமர்ந்திருந்து மனதை ஒரு நிலைப்படுத்தி
ஒரு நிமிடமாவது ஜெப நிலையில் காத்திருங்கள்.



## சங்கீதம் 70

**( நினைப்பூட்டுதலாகப் பாடி இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்)**

1. தேவனே, என்னை விடுவியும், **கர்த்தாவே,** எனக்குச் சகாயஞ்செய்யத் தீவிரியும்.

2. என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கி நாணுவார்களாக; எனக்குத் தீங்குவரும்படி விரும்புகிறவர்கள் பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக.

3. ஆ ஆ, ஆ ஆ, என்பவர்கள் தாங்கள் அடையும் வெட்கத்தினால் பின்னிட்டுப் போவார்களாக.

4. உம்மைத் தேடுகிற யாவரும் உம்மில் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக; உமது இரட்சிப்பில் பிரியப்படுகிறவர்கள் தேவனுக்கு மகிமையுண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக.



5. நானோ சிறுமையும் எளிமையுமானவன்; தேவனே, என்னிடத்தில் தீவிரமாய் வாரும்: நீரே என் துணையும் என்னை விடுவிக்கிற வருமானவர், **கர்த்தாவே,** தாமதியாதேயும்.

## சங்கீதம் 71

1. **கர்த்தாவே,** உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.

2. உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.

3. நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.



4. என் தேவனே, துன்மார்க்கனுடைய கைக்கும், நியாயக்கேடும் கொடுமையுமுள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.

5. **கர்த்தராகிய** ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறுவயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.



6. நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்; என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.

7. அநேகருக்கு
நான் ஒரு புதுமைபோலானேன்;
நீரோ எனக்குப் பலத்த
அடைக்கலமாயிருக்கிறீர்.

8. என் வாய்
உமது துதியினாலும்,
நாள்தோறும்
உமது மகத்துவத்தினாலும்
நிறைந்திருப்பதாக.



9. முதிர்ந்த வயதில்
என்னைத் தள்ளி
விடாமலும்,
என் பெலன்
ஒடுங்கும் போது
என்னைக் கைவிடாமலும்
இரும்.



10. என் சத்துருக்கள்
எனக்கு விரோதமாய்ப் பேசி,
என் ஆத்துமாவுக்குக்
காத்திருக்கிறவர்கள்
ஏகமாய் ஆலோசனைபண்ணி:

11. **தேவன்**
அவனைக் கைவிட்டார்,
அவனைத் தொடர்ந்து
பிடியுங்கள்;
அவனை விடுவிப்பார்
இல்லை என்கிறார்கள்.

12. தேவனே, எனக்குத்
தூரமாயிராதேயும்;
என் தேவனே, எனக்குச்
சகாயம்பண்ணத் தீவிரியும்.

13. என் ஆத்துமாவை
விரோதிக்கிறவர்கள் வெட்கி
அழியவும், எனக்குப்
பொல்லாப்புத் தேடுகிறவர்கள்
நிந்தையாலும் இலச்சையாலும்
மூடப்படவுங்கடவர்கள்.

14. நானோ எப்பொழுதும்
நம்பிக்கை கொண்டிருந்து,
மேன்மேலும்
உம்மைத் துதிப்பேன்.

15. என் வாய் நாள்தோறும்
உமது நீதியையும்
உமது இரட்சிப்பையும்
சொல்லும்; அவைகளின்
தொகையை நான் அறியேன்.

16. **கர்த்தராகிய
ஆண்டவருடைய**
வல்லமையை முன்னிட்டு
நடப்பேன்;
உம்முடைய நீதியைப் பற்றியே
மேன்மை பாராட்டுவேன்.

17. தேவனே, என் சிறுவயது
முதல் எனக்குப் போதித்து
வந்தீர்; இதுவரைக்கும்
உம்முடைய அதிசயங்களை
அறிவித்து வந்தேன்.

18. இப்பொழுதும் தேவனே,
இந்தச் சந்ததிக்கு
உமது வல்லமையையும்,
வரப்போகிற யாவருக்கும்
உமது பராக்கிரமத்தையும்
நான் அறிவிக்குமளவும்,
முதிர்வயதும்
நரைமயிருமுள்ளவனாகும்
வரைக்கும்
என்னைக்
கைவிடீராக.



19. தேவனே,
உம்முடைய நீதி
உன்னதமானது,
பெரிதானவைகளை
நீர் செய்தீர்; தேவனே,
உமக்கு நிகரானவர் யார்?



20. அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர்.

21. என் மேன்மையைப் பெருகப் பண்ணி, என்னை மறுபடியும் தேற்றுவீர்.



22. என் தேவனே, நான் வீணையைக் கொண்டு உம்மையும், உம்முடைய சத்தியத்தையும் துதிப்பேன்; இஸ்ரவேலின் பரிசுத்தரே, சுரமண்டலத்தைக் கொண்டு உம்மைப் பாடுவேன்.

23. நான் பாடும்போது என் உதடுகளும், நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும்.

24. எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்தபடியால், நாள்தோறும் என் நாவு உமது நீதியைக் கொண்டாடும்.

சங்கீதங்களின் இராகமும், அவைகளின் இசை மீட்டப்படும் இசைக் கருவிகளின் பெயர்களும் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்த சூழ்நிலையில் சங்கீதம் இயற்றப்பட்டது என்பதையும் சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் நீங்கள் கவனிக்கலாம்.

## சங்கீதம் 72

**(சாலொமோனைப் பற்றிய சங்கீதம்)**

1. **தேவனே,** ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும்.

2. அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்.

3. பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.

4. ஜனத்தில் சிறுமைப்படுகிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார்.

5. சூரியனும் சந்திரனுமுள்ள மட்டும், அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள்.

6. புல்லறுப்புண்ட வெளியின் மேல் பெய்யும் மழையைப் போலவும், பூமியை நனைக்கும் தூறலைப் போலவும் இறங்குவார்.

7. அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்.

8. ஒரு சமுத்திரந்தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும், நதி தொடங்கிப் பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார்.

9. வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள்; அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.

10. தர்ஷீசின் ராஜாக்களும், தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள்; ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள்.

11. சகல ராஜாக்களும் அவரைப் பணிந்து கொள்வார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.

12. கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார்.

13. பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார்.



14. அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார்; அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும்.

15. அவர் பிழைத்திருப்பார், ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும்; அவர் நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார்.

16. பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும்; அதின் விளைவு லீபனோனைப் போல அசையும்; பூமியின் புல்லைப் போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்.

17. அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்; சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும்; மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.

18. இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற **கர்த்தராகிய** தேவனுக்கு ஸ்தோத்திர முண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறவர்.

19. அவருடைய மகிமை பொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. **ஆமென், ஆமென்.**

20. ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது.

**சங்கீதங்கள் 42-72**

**பாகம் 2. முடிவடைகிறது.**

(ஆசாபின் சங்கீதம்)

## சங்கீதங்கள் 73 - 89

## பாகம் 3. ஆரம்பம்

1. சுத்த இருதயமுள்ளவர்களாகிய
இஸ்ரவேலருக்குத் தேவன்
நல்லவராகவே இருக்கிறார்.

2. ஆனாலும் என் கால்கள்
தள்ளாடுதலுக்கும்,
என் அடிகள் சறுக்குதலுக்கும்
சற்றே தப்பிற்று.

3. துன்மார்க்கரின் வாழ்வை
நான் காண்கையில்,
வீம்புக்காரராகிய
அவர்கள்மேல் பொறாமை
கொண்டேன்.

4. மரணபரியந்தம்
அவர்களுக்கு
இடுக்கண்களில்லை;
அவர்களுடைய பெலன்
உறுதியாயிருக்கிறது.

5. நரர் படும் வருத்தத்தில்
அகப்படார்கள்; மனுஷர்
அடையும் உபாதியை
அடையார்கள்.

6. ஆகையால் பெருமை
சரப்பணியைப்போல்
அவர்களைச் சுற்றிக்கொள்ளும்,
கொடுமை ஆடையைப்போல்
அவர்களை மூடிக்கொள்ளும்.

7. அவர்கள் கண்கள்
கொழுப்பினால்
எடுப்பாய்ப் பார்க்கிறது;
அவர்கள் இருதயம்
விரும்புவதிலும்
அதிகமாய் நடந்தேறுகிறது.

8. அவர்கள் சீர்கெட்டுப்போய்,
அகந்தையாய்க்
கொடுமை பேசுகிறார்கள்;
இறுமாப்பாய்ப் பேசுகிறார்கள்.

9. தங்கள் வாய் வானமட்டும்
எட்டப்பேசுகிறார்கள்;
அவர்கள் நாவு பூமியெங்கும்
உலாவுகிறது.

10. ஆகையால்
அவருடைய ஜனங்கள்
இந்த வழியாகவே
திரும்புகிறார்கள்;
தண்ணீர்கள்
அவர்களுக்குப்
பரிபூரணமாய்ச் சுரந்துவரும்.

11. தேவனுக்கு
அது எப்படித் தெரியும்?
உன்னதமானவருக்கு
அதைப் பற்றி அறிவு உண்டோ?
என்று சொல்லுகிறார்கள்.

12. இதோ, இவர்கள் துன்மார்க்கர்;
இவர்கள் என்றும்
சுக ஜீவிகளாயிருந்து,
ஆஸ்தியைப்
பெருகப்பண்ணுகிறார்கள்.

13. நான் விருதாவாகவே
என் இருதயத்தைச்
சுத்தம்பண்ணி,
குற்றமில்லாமையிலே
என் கைகளைக் கழுவினேன்.



14. நாள்தோறும்
நான் வாதிக்கப்பட்டும்,
காலைதோறும்
தண்டிக்கப்பட்டும்
இருக்கிறேன்.



15. இவ்விதமாய்ப் பேசுவேன்
என்று நான் சொன்னேனானால்,
இதோ, உம்முடைய
பிள்ளைகளின் சந்ததிக்குத்
துரோகியாவேன்.



16. இதை அறியும்படிக்கு
யோசித்துப்பார்த்தேன்;
நான் தேவனுடைய பரிசுத்த
ஸ்தலத்துக்குள் பிரவேசித்து,

17. அவர்கள் முடிவைக்
கவனித்து உணருமளவும்,
அது என் பார்வைக்கு
விசனமாயிருந்தது.

18. நிச்சயமாகவே
நீர் அவர்களைச் சறுக்கலான
இடங்களில் நிறுத்தி,
பாழான இடங்களில்
விழப்பண்ணுகிறீர்.

19. அவர்கள் ஒரு நிமிஷத்தில்
எவ்வளவு பாழாய்ப்
போகிறார்கள்!
பயங்கரங்களால் அழிந்து
நிர்மூலமாகிறார்கள்.

20. நித்திரை தெளிந்தவுடனே
சொப்பனம் ஒழிவதுபோல்,
ஆண்டவரே,
நீர் விழிக்கும்போது,
அவர்கள் வேஷத்தை இகழுவீர்.



21. இப்படியாக
என் மனம்
கசந்தது,
என் உள்ளிந்திரியங்களிலே
குத்துண்டேன்.

22. நான் காரியம்
அறியாத மூடனானேன்;
உமக்கு முன்பாக மிருகம்
போலிருந்தேன்.

23. ஆனாலும்,
நான் எப்பொழுதும்
உம்மோடிருக்கிறேன்;
என் வலதுகையைப் பிடித்துத்
தாங்குகிறீர்.



24. உம்முடைய
ஆலோசனையின்படி
நீர் என்னை நடத்தி,
முடிவிலே என்னை
மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.

25. பரலோகத்தில்
உம்மையல்லாமல்
எனக்கு யார் உண்டு?
பூலோகத்தில் உம்மைத் தவிர
எனக்கு வேறே விருப்பமில்லை.



26. என் மாம்சமும்
என் இருதயமும்
மாண்டுபோகிறது;
தேவன் என்றென்றைக்கும்
என் இருதயத்தின் கன்மலையும்
என் பங்குமாயிருக்கிறார்.

27. இதோ, உம்மைவிட்டுத்
தூரமாய்ப் போகிறவர்கள்
நாசமடைவார்கள்;
உம்மைவிட்டுச் சோரம்போகிற
அனைவரையும் சங்கரிப்பீர்.

28. எனக்கோ, தேவனை
அண்டிக்கொண்டிருப்பதே
நலம்; நான்
உமது கிரியைகளையெல்லாம்
சொல்லிவரும்படி
**கர்த்தராகிய**
ஆண்டவர்மேல்
என் நம்பிக்கையை
வைத்திருக்கிறேன்.

**(மஸ்கீல் என்னும் ஆசாபின் போதக சங்கீதம்)**

1. தேவனே, நீர்
எங்களை என்றென்றைக்கும்
ஏன் தள்ளிவிடுகிறீர்?
உமது மேய்ச்சலின்
ஆடுகள் மேல் உமது கோபம்
ஏன் புகைகிறது?



2. நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த
உமது சபையையும்,
நீர் மீட்டுக்கொண்ட
உமது சுதந்தரமான
கோத்திரத்தையும்,
நீர் வாசமாயிருந்த
சீயோன் பர்வதத்தையும்
நினைத்தருளும்.

3. நெடுங்காலமாகப்
பாழாய்க்கிடக்கிற
ஸ்தலங்களில்
உம்முடைய பாதங்களை
எழுந்தருளப்பண்ணும்;
பரிசுத்த ஸ்தலத்திலே
சத்துரு அனைத்தையும்
கெடுத்துப்போட்டான்.

4. உம்முடைய சத்துருக்கள்
உம்முடைய
ஆலயங்களுக்குள்ளே
கெர்ச்சித்து, தங்கள் கொடிகளை
அடையாளங்களாக
நாட்டுகிறார்கள்.

5. கோடாரிகளை
ஓங்கிச் சோலையிலே
மரங்களை
வெட்டுகிறவன்
பேர்பெற்றவனானான்.



6. இப்பொழுதோ அவர்கள்
அதின் சித்திரவேலைகள்
முழுவதையும்
வாச்சிகளாலும்
சம்மட்டிகளாலும்
தகர்த்துப் போடுகிறார்கள்.



7. உமது பரிசுத்த ஸ்தலத்தை
அக்கினிக்கு இரையாக்கி,
உமது நாமத்தின்
வாசஸ்தலத்தைத்
தரைமட்டும் இடித்து,
அசுத்தப்படுத்தினார்கள்.

8. அவர்களை ஏகமாய்
நிர்த்துளியாக்குவோம்
என்று தங்கள் இருதயத்தில்
சொல்லி, தேசத்திலுள்ள
ஆலயங்களையெல்லாம்
சுட்டெரித்துப்போட்டார்கள்.

9. எங்களுக்கு இருந்த
அடையாளங்களைக்
காணோம்; தீர்க்கதரிசியும்
இல்லை; இது எதுவரைக்கும்
என்று அறிகிறவனும்
எங்களிடத்தில் இல்லை.

10. தேவனே, எதுவரைக்கும்
சத்துரு நிந்திப்பான்?
பகைவன் உமது நாமத்தை
எப்பொழுதும்
தூஷிப்பானோ?

11. உமது வலதுகரத்தை
ஏன் முடக்கிக்கொள்ளுகிறீர்;
அதை உமது மடியிலிருந்து
எடுத்து ஓங்கி நிர்மூலமாக்கும்.

12. பூமியின் நடுவில்
இரட்சிப்புகளைச்
செய்துவருகிற தேவன் பூர்வ
காலமுதல் என்னுடைய ராஜா.

13. தேவரீர் உமது
வல்லமையினால் சமுத்திரத்தை
இரண்டாகப் பிளந்து,
ஜலத்திலுள்ள வலுசர்ப்பங்களின்
தலைகளை உடைத்தீர்.

14. தேவரீர் முதலைகளின்
தலைகளை நருக்கிப்போட்டு,
அதை வனாந்தரத்து
ஜனங்களுக்கு உணவாகக்
கொடுத்தீர்.

15. ஊற்றையும் ஆற்றையும்
பிளந்து விட்டீர் ;
மகா நதிகளையும்
வற்றிப்போகப்பண்ணினீர்.

16. பகலும் உம்முடையது,
இரவும் உம்முடையது;
தேவரீர் ஒளியையும்
சூரியனையும் படைத்தீர்.



17. பூமியின்
எல்லைகளையெல்லாம்
திட்டம்பண்ணினீர்;
கோடை காலத்தையும்
மாரிக்காலத்தையும்
உண்டாக்கினீர்.

18. **கர்த்தாவே,** சத்துரு
உம்மை நிந்தித்ததையும்,
மதியீன ஜனங்கள்
உமது நாமத்தைத்
தூஷித்ததையும்
நினைத்துக்கொள்ளும்.

19. உமது காட்டுப்புறாவின்
ஆத்துமாவைத்
துஷ்டருடைய
கூட்டத்திற்கு
ஒப்புக்கொடாதேயும்;
உமது ஏழைகளின் கூட்டத்தை
என்றைக்கும் மறவாதேயும்.



20. உம்முடைய
உடன்படிக்கையை
நினைத்தருளும்;
பூமியின் இருளான
இடங்கள் கொடுமையுள்ள
குடியிருப்புகளால்
நிறைந்திருக்கிறதே.

21. துன்பப்பட்டவன்
வெட்கத்தோடே
திரும்பவிடாதிரும்; சிறுமையும்
எளிமையுமானவன்
உமது நாமத்தைத் துதிக்கும்படி
செய்யும்.

22. தேவனே, எழுந்தருளும்,
உமக்காக நீரே வழக்காடும்;
மதியீனனாலே நாடோறும்
உமக்கு வரும் நிந்தையை
நினைத்துக்கொள்ளும்.

23. உம்முடைய சத்துருக்களின்
ஆரவாரத்தை மறவாதேயும்;
உமக்கு விரோதமாய்
எழும்புகிறவர்களின் அமளி
எப்பொழுதும் அதிகரிக்கிறது.

தேவனைப் பற்றி அதிகமாக இப்புத்தகம் எடுத்துச் சொல்கிறது. சாதாரண மனிதனின் வாழ்க்கையில் அவனை எதிர்கொள்ளும் பலவிதமான அனுபவங்கள், சூழ்நிலைகள், தோல்விகள், வெற்றிகள் காரணமாக எழும்பும் உணர்ச்சிகளும், உள்ளக் குமுறல்களும், கருத்துக்களும் அப்படியே சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

**(அல்தஷ்கேத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கும்படி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதமாகிய பாட்டு)**

1. உம்மைத் துதிக்கிறோம், தேவனே, உம்மைத் துதிக்கிறோம்; உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது.



2. நியமிக்கப்பட்ட காலத்திலே, யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன்.

3. பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்து போகிறது; அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன். (சேலா)

4. வீம்புக்காரரை நோக்கி, வீம்பு பேசாதேயுங்கள் என்றும்; துன்மார்க்கரை நோக்கி, கொம்பை உயர்த்தாதிருங்கள் என்றும் சொன்னேன்.

5. உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள்; இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள்.

6. கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது.

7. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.

8. கலங்கிப் பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் **கர்த்தருடைய** கையிலிருக்கிறது, அதிலிருந்து வார்க்கிறார்; பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்.

9. நானோ என்றென்றைக்கும் இதை அறிவித்து, யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

10. துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப்போடுவேன்; நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும்.

இந்தப் புத்தகம் ஒரு பக்தி நூலாகும். தேவனை நேசிக்கும் ஒரு பக்தன் தனக்கும் அவருக்குமுள்ள நெருக்கமான உறவை பல விதங்களில் வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்துவதை, விவரிப்பதை இப்புத்தகத்தில் பார்க்கலாம். நமது பக்தி உணர்வை, பரவசத்தைத் தூண்ட, தெளிவுபடுத்த சங்கீதப் புத்தகம் பெருமளவில் உதவுகிறது.

**(நெகிநோத்தென்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதமாகிய பாட்டு)**

1. யூதாவில் தேவன் அறியப்பட்டவர்; இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது.

2. சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது.

3. அங்கேயிருந்து வில்லின் அம்புகளையும், கேடகத்தையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் முறித்தார். (சேலா)





4. மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப் பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர்.

5. தைரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்ளையிடப்பட்டு, நித்திரையடைந்து அசர்ந்தார்கள்; வல்லமையுள்ள எல்லா மனுஷருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று.

6. யாக்கோபின் தேவனே, உம்முடைய கண்டிதத்தினால் இரதங்களும் குதிரைகளும் உறங்கி விழுந்தது.

சங்கீதத்தில் தேவனைப்பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடியுங்கள்.

7. நீர், நீரே, பயங்கரமானவர்; உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்?

8. நியாயம் விசாரிக்கவும் பூமியில் சிறுமைப்பட்டவர்கள் யாவரையும் இரட்சிக்கவும், தேவரீர் எழுந்தருளினபோது,

9. வானத்திலிருந்து நியாயத்தீர்ப்புக் கேட்கப்பண்ணினீர்; பூமி பயந்து அமர்ந்தது.(சேலா)

10. மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர்.

11. பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய **கர்த்தருக்கு** நிறைவேற்றுங்கள்; அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள்.

12. பிரபுக்களின் ஆவியை அடக்குவார்; பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர்.

பழைய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 19 ஆவது புத்தகமாக அமைந்திருக்கும் இப்புத்தகம் செய்யுள் நடையில் எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். இப்புத்தகம் எல்லோராலும் விரும்பி வாசிக்கப்படும் ஒரு இனிமையான புத்தகமாகும்.

**(எதுதூன் என்னும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம்)**

*1.நான் தேவனை நோக்கி
என் சத்தத்தை உயர்த்திக்
கெஞ்சினேன், என் சத்தத்தைத்
தேவனிடத்தில் உயர்த்தினேன்,
அவர் எனக்குச்
செவிகொடுத்தார்.*



*2. என் ஆபத்துநாளில்
ஆண்டவரைத் தேடினேன்;
இரவிலும் என் கை தளராமல்
விரிக்கப்பட்டிருந்தது;
என் ஆத்துமா
ஆறுதலடையாமற் போயிற்று.*

*3. நான் தேவனை
நினைத்தபோது அலறினேன்;
நான் தியானிக்கும்போது
என் ஆவி தொய்ந்துபோயிற்று.
(சேலா.)*



*4.நான் தூங்காதபடி
என்
கண்ணிமைகளைப்
பிடித்திருக்கிறீர்;
நான் பேசமாட்டாதபடி
சஞ்சலப்படுகிறேன்.*



*5. பூர்வ நாட்களையும்,
ஆதிகாலத்து வருஷங்களையும்
சிந்திக்கிறேன்.*

*6. இராக்காலத்தில்
என் சங்கீதத்தை
நான் நினைத்து,
என் இருதயத்தோடே
சம்பாஷித்துக் கொள்ளுகிறேன்;
என் ஆவி ஆராய்ச்சி செய்தது.*



*7. ஆண்டவர் நித்தியகாலமாய்த்
தள்ளிவிடுவாரோ?
இனி ஒருபோதும்
தயைசெய்யாதிருப்பாரோ?*

*8. அவருடைய கிருபை
முற்றிலும் அற்றுப்போயிற்றோ?
வாக்குத்தத்தமானது
தலைமுறை தலைமுறைக்கும்
ஒழிந்துபோயிற்றோ?*

*9. தேவன் இரக்கஞ்செய்ய
மறந்தாரோ?
கோபத்தினாலே
தமது உருக்கமான
இரக்கங்களை
அடைத்துக்கொண்டாரோ?
என்றேன். (சேலா.)*



*10. அப்பொழுது நான்;
இது என் பலவீனம்;
ஆனாலும்
உன்னதமானவருடைய
வலதுகரத்திலுள்ள வருஷங்களை
நினைவுகூருவேன்.*

*11.* **கர்த்தருடைய** *செயல்களை
நினைவுகூருவேன்,
உம்முடைய பூர்வகாலத்து
அதிசயங்களையே
நினைவுகூருவேன்;*

*12. உம்முடைய
கிரியைகளையெல்லாம்
தியானித்து,
உம்முடைய
செயல்களை
யோசிப்பேன் என்றேன்.*




*13. தேவனே, உமது வழி
பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது;
நம்முடைய தேவனைப்போலப்
பெரிய தேவன் யார்?*

14. அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே; ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணினீர்.

15. யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் புத்திரராகிய உம்முடைய ஜனங்களை, உமது புயத்தினாலே மீட்டுக்கொண்டீர். (சேலா)



16. ஜலங்கள் உம்மைக் கண்டது; தேவனே, ஜலங்கள் உம்மைக் கண்டு தத்தளித்தது; ஆழங்களும் கலங்கினது.

17. மேகங்கள் ஜலங்களைப் பொழிந்தது; ஆகாயமண்டலங்கள் முழக்கமிட்டது; உம்முடைய அம்புகளும் தெறிப்புண்டு பறந்தது.

18. உம்முடைய குமுறலின் சத்தம் சுழல்காற்றில் முழங்கினது; மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி குலுங்கி அதிர்ந்தது.

19. உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது; உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று.

20. மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டு மந்தையைப்போல வழிநடத்தினீர்.



## சங்கீதங்கள் — 5 புத்தகங்களைக் கொண்டது.

இந்த ஒவ்வொரு பாகமும் ஒரு புத்தகமாகும். சங்கீதப் புத்தகம் இந்த **5** புத்தகங்களைக் கொண்ட ஒரு புத்தகமாகும். இந்த **5** புத்தகங்களும் பழைய ஏற்பாட்டில் ‘பஞ்சாகமங்கள்’ என்று அழைக்கப்படும். வேதாகமத்தின் முதல் **5** புத்தகங்கள் போல் காணப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1- 41 | 42- 72 | 73- 89 | 90-106 | 107-150 |

| **சங்கீதங்கள்** | **எழுதியவர்** | **தலைப்பு** |
|---|---|---|
| 1 - 41 | தாவீது | படைப்பு |
| ① பொருத்தமான புத்தகம்: **ஆதியாகமம்** | | |
| 42 - 72 | தாவீதும், கோராகும், | மீட்பு |
| ② பொருத்தமான புத்தகம் : **யாத்திராகமம்** | | |
| 73 - 89 | ஆசாப் | பரிசுத்தம் |
| ③ பொருத்தமான புத்தகம்: **லேவியராகமம்** | | |
| 90 - 106 | மற்றவர்கள் | அலைந்து திரிதல் |
| ④ பொருத்தமான புத்தகம்: **எண்ணாகமம்** | | |
| 107 - 150 | தாவீதும், மற்றவர்களும் | தேவனைப் போற்றுதல் |
| ⑤ பொருத்தமான புத்தகம்: **உபாகமம்** | | |

**உங்கள் கவனத்திற்கு!**



